1968 மார்ச் 28] [Thiru C. N. Annadurai]

said that I am going to the United States and asked what arrangements were going to be made to look after my portfolio, whether new Ministers were going to be appointed and what were the names of those lucky members. As soon as the details are worked out I will certainly take the House into my confidence because I need not only your confidence but also your goodwill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று நான்கு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் உள்ளன. இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்குமேல் ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்று விதி இருக்கிறது. அந்த விதியைத் தளர்த்துவதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

4. அரசினர் தீர்மானம்

பேரவை விதி 41 (3) தளர்த்தப்படுதல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, "சட்டப்பேரவையின் 41(3)-வது விதியின்கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்று உள்ளதை இன்று தளர்த்த வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனி, கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. முதலில் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள்.

5. கவன ஈர்ப்பு

(i) தஞ்சை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்

திரு. ஆ. கு. சுப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் பெரும் மழை பெய்து ஆறுகள் உடைப்பால் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி சாகுபடியான பயிர்கள், தானியங்கள் சேதமடைந்தும், வீடுகள் இடிந்தும் விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிலவரி ரத்து செய்யவும் குத்தகையைக் குறைத்தும் வீடு இழந்தவர்களுக்கு நிவாரணமளிக்கவும் சர்க்கார் கடனை ஒத்திவைக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.